


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"




Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 361 | 23.06.2026 | TUESDAY | AANI : 9 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 361 | 23.06.2026 | செவ்வாய்கிழமை | ஆனி : 9 | விலை : ரூ.5/–

## அயோத்தி ராமர் கோயில் காணிக்கை எண்ணும் பணியில்

# "தனியார் ஊழியர்கள் விதிமீறல்"

புதுடெல்லி: ஜூன்.23-

அயோத்தி ராமர் கோயில் காணிக்கை பணத்தை எண்ணிய தனியார் ஊழியர்களுக்கு சீருடை இல்லை, சோதனை இல்லை என்ற தகவல் வெளியாகி உள்ளது. எந்த விதிமுறைகளையும் கடைபிடிக்காமல் இவர்கள் பணியாற்றி வந்ததாக உத்தரப் பிரதேச அரசின் எஸ்ஐடி (சிறப்பு விசாரணைக் குழு) தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேசம் அயோத்தி ராமர் கோயில் காணிக்கை திருட்டு வழக்கில் பல தீவிரமான குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளன. எஸ்ஐடி விசாரணையின்படி, பல்வேறு தரப்பினரின் பரிந்துரையின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட தனியார் நிறுவன ஊழியர்களே பணத்தை எண்ணியுள்ளனர்.

ஊழியர்களின் வருகை மற்றும் வெளியேற்றம் முறையாக சோதிக்கப்படவில்லை. சீருடை மற்றும் சிசிடிவி கண்காணிப்பு நடைமுறைகளும் சரியாக பின்பற்றப்படவில்லை. இந்த வகையில், ஒவ்வொரு நிலையிலும் பெரும் அலட்சியம் இருந்ததை எஸ்ஐடி கண்டறிந்துள்ளது.

ஸ்ரீராமஜென்மபூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளை நிதிக்கான வங்கிப் பணிகளைக் கையாளும் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, பணத்தைப் பிரித்தல், அடுக்கி வைத்தல் மற்றும் எண்ணுதல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக இருந்தது.

பணத்தை எண்ணுவதற்கு எஸ்பிஐ ஒரு தனியார் பாதுகாப்பு நிறுவனத்தின் ஊழியர்களைப் பணியமர்த்தியது. இதற்காக, வாரணாசியில் உள்ள ஒரு தனியார் பாதுகாப்பு நிறுவனத்துடன் எஸ்பிஐ ஒப்பந்தம் செய்திருந்தது.

அந்த நிறுவனம், பணத்தை எண்ணும் பணிக்கு ராமர் கோயில் அறக்கட்டளையுடன் தொடர்புடைய






நபர்களின் பரிந்துரையின் பேரில் அயோத்தியைச் சேர்ந்த இளைஞர்களை அமர்த்தியது.

அறிமுகமானவர்களின் பரிந்துரையின் பேரில் வேலை பெறும் வழக்கத்தைப் பின்பற்றி, அனுகுல் மிஸ்ரா தனது மைத்துனர் லவ்குஷ் மிஸ்ராவை ராமர் கோயில் அறக்கட்டளையில் பணியில் அமர்த்தினார்.

ஊழியர்களின் வருகை மற்றும் வெளியேற்றத்தின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய சோதனைகளிலும் அலட்சியம் இருந்தது தெரியவந்தது. யார் எதைக் கொண்டு வருகிறார்கள் அல்லது எடுத்துச் செல்கிறார்கள் என்பது குறித்து எந்தச் சோதனையும் இல்லை.

சீருடைகள் இன்றி, ஊழியர்கள் தாங்கள் அன்றாடம் அணிந்த உடைகளை அணிந்துகொண்டு ராமர் கோயில் அறக்கட்டளை அறையில் அமர்ந்து பணத்தை எண்ணினர். அனைவருக்கும் சீருடை விதிமுறைகள் வகுக்கப்பட்டு சீருடைகள் வழங்கப்பட்டிருந்தாலும், யாரும் அவற்றை அணியவில்லை.

கோயில் வளாகத்திலிருந்து அறக்கட்டளை அறைக்குக் காணிக்கைப் பெட்டிகளைக் கொண்டு செல்வது முதல் வங்கியில் பணத்தைச் செலுத்துவது வரை ஒவ்வொரு நிலையிலும் அலட்சியம் இருந்ததை எஸ்ஐடியின் விசாரணை வெளிப்படுத்தியது.

சிசிடிவி காட்சிகளிலும் அலட்சியம் வெளிப்பட்டிருந்தது தெரிந்துள்ளது. ஊழியர்கள் சிசிடிவி கேமராக்களுக்கு முன்னால் நின்றுகொண்டே திருட்டில் ஈடுபட்டதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தற்போது எஸ்ஐடியின் அறிவுறுத்தலின் பேரில் காணிக்கை என்னும் பணி முழுவதும் சிசிடிவி கேமிராக்களால் பதிவாகி சேமித்து வைக்கப்பட உள்ளது. இதுவரை கிடைத்த ஆதாரங்களின் பேரில் எஸ்ஐடி இன்று கானிக்கை திருட்டு வழக்கில் எப்ஐஆர் பதிவு செய்ய உள்ளது.

இதற்கிடையில், அயோத்தி ஸ்ரீ ராமர் கோயிலில் காணிக்கைகள் மற்றும் நன்கொடைகள் தொடர்பான முறைகேடுகள் மற்றும் நிதி முறைகேடுகள் குறித்து சிபிஐ விசாரணை மற்றும் தலைமைத் தணிக்கையாளர் மூலம் தணிக்கை கோரி பொதுநல வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கை அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் லக்னோ அமர்வு இன்று (திங்கள்கிழமை) விசாரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வழக்கின் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மோஹித் அசோக் சர்மா கூறுகையில், "இவ்விவகாரம் லட்சக்கணக்கான பக்தர்களின் நம்பிக்கை மற்றும் பரந்த பொது நலன் சார்ந்தது என்பதால், இதற்கு முன்னுரிமை அடிப்படையில் விசாரணை தேவை. தேவைப்பட்டால், இவ்வழக்கை கூடுதல் வழக்குப்பட்டியலில் சேர்ப்பதற்கான கோரிக்கையும் முன்வைக்கப்படும். இவ்வழக்கு நீதிமன்ற எண் 2 இல் இன்றைய விசாரணைக்காகப் பட்டியலிடப்பட்டுள்ளது." எனத் தெரிவித்தார்.

இதனிடையே, அயோத்தியில் முதல்வர் யோகி ஆதித்யநாத்தை இன்று எஸ்ஐடி உறுப்பினர்கள் சந்தித்தனர். அப்போது முதல்வரிடம், ஒரு முதற்கட்ட அறிக்கையை சமர்ப்பித்தனர். இந்த முதற்கட்ட அறிக்கையைத் தொடர்ந்து, எஸ்ஐடி ஒரு விரிவான அறிக்கையை தயாரித்து சமர்ப்பிக்கவுள்ளது.

எஸ்ஐடியின் விசாரணை வரம்பிற்குள் வரும் நபர்கள் எவரும் முன்அறிவிப்பின்றி அயோத்தியை விட்டு வெளியேறக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது. விசாரணையுடன் தொடர்புடைய அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் பிற நபர்கள் நகரத்தை விட்டு வெளியேறும் முன் சிறப்புப் புலனாய்வுக் குழுவுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விசாரணையில் எந்தவித இடையூறும் ஏற்படாமல் தடுப்பதற்கும், தேவைப்படும்போது தொடர்புடைய நபர்களிடம் உடனடியாக விசாரணை நடத்துவதை உறுதி செய்வதற்கும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தற்போது இக்குழு இவ்வழக்கின் ஒவ்வொரு அம்சம் குறித்தும் தீவிர விசாரணை நடத்தி வருகிறது.

## "மேகேதாட்டு விவகாரத்தை கர்நாடக முதல்வருடன் நட்பு ரீதியாக பேசித் தீர்க்க வேண்டும்"

### பேரவையில் பிரேமலதா கோரிக்கை



சென்னை: ஜூன்.23-

"மேகேதாட்டு விவகாரத்தை தமிழக முதல்வர் விஜய், கர்நாடக முதல்வருடன் நட்பு ரீதியாக பேசித் தீர்க்க வேண்டும். இல்லையெனில் சட்ட ரீதியாக எதிர்கொண்டு இந்த விவகாரத்தில் நிரந்தர தீர்வினை ஏற்படுத்த வேண்டும்" என தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் பேசிய பிரேமலதா, "சட்டப்பேரவையில் பேசுவதற்கு அனைத்து உறுப்பினர்களுக்கும் சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். ஆளுநர் உரை தமிழ்த் தாய் வாழ்த்தோடு தொடங்கியதை வரவேற்கிறேன். அதேபோல ஆளுநர் உரை ஆளும் கட்சியின் உரையாக இருந்தது. ஆளுநரின் 37 நிமிட உரை முழுவதும் ஆளும் தவெக அரசுக்கு ஆதரவாக மட்டுமே எழுதப்பட்டிருந்தது. 37 நிமிட உரையில் தமிழ் உச்சரிப்பில் 37 தவறுகள் இருந்தன, இது வேதனையானது. நமது தலைவர்களின் பெயரை சொல்லும் போது அத்தனை தவறுகள் இருந்தது.

மேகேதாட்டு அணை விவகாரத்தில் யாரும் விட்டுக்கொடுக்க மாட்டோம். தமிழகம், கேரளா, கர்நாடகாவில் இப்போது புதியவர்கள் முதல்வர்களாக பொறுப்பேற்றுள்ளனர். எனவே, மேகேதாட்டு விவகாரத்தை தமிழக முதல்வர் கர்நாடக முதல்வருடன் நட்பு ரீதியாக பேசித் தீர்க்க வேண்டும். இல்லையெனில் சட்ட ரீதியாக எதிர்கொண்டு இந்த விவகாரத்தில் நிரந்தரத் தீர்வினை ஏற்படுத்த வேண்டும்" எனத் தெரிவித்தார்.

சுவாரஸ்யப் பேச்சு:

பிரேமலதா பேசும்போது, "சட்டப்பேரவையில் சில்வர் டம்ளர்களில் தண்ணீர் வழங்கப்படுகிறது. அதற்கு பதிலாக கண்ணாடி பாட்டில்களில் தண்ணீர் வழங்க வேண்டும்" என்றார். அப்போது குறுக்கிட்ட திமுக எம்எல்ஏ ஓ.பன்னீர்செல்வம், "கண்ணாடி பாட்டில்களில் தண்ணீர் வழங்க வேண்டும் என்பது ஏற்புடையதல்ல. அப்படி வழங்கினால், கோபம் வரும்போது தூக்கி எறியவும் வாய்ப்புள்ளது." என்றார். அப்போது குறுக்கிட்ட திமுக எம்எல்ஏ தங்கம் தென்னரசு, "ஓபிஎஸ் சொந்த அனுபவத்தின் அடிப்படையில் இதைப் பேசுகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்" எனத் தெரிவித்ததும் அவையில் சிரிப்பலை நிலவியது.

### "தவெக அல்ல... அது தவெக என்கின்ற அதிமுக!"

# "புதிய பாட்டிலில் பழைய மது..."

### தமிழக அரசியலில் எகிறும் விவாதங்களும் நகர்வுகளும்!

"புதிய பாட்டிலில் பழைய மது" என்பதைப் போல, புதிய சிந்தாந்தங்களோடு களம் கண்டுள்ள ஒரு மாற்று அரசியல் பேரியக்கத்தில், பாரம்பரியக் கட்சிகளின் நிர்வாகிகள் தங்களின் சுயலாபத்திற்காகப் படையெடுப்பது தமிழக அரசியலில் ஒன்றும் புதிய விந்தையான காரியமல்ல. "தவெக (என்ற) அதிமுக" என்ற கேள்வி, தற்போதைய தரைமட்ட அரசியல் சூழலில் மிகக் கறாரான மற்றும் ஆக்கப்பூர்வமான ஒரு நிதர்சனப் பார்வையாகும்.

அதிமுகவில் சீட் கிடைக்காதவர்கள், செல்வாக்கை இழந்தவர்கள் மற்றும் ஓரம் கட்டப்பட்டவர்கள் அனைவரும் தவெகவை ஒரு தற்காலிகப் புகலிடமாகப் பயன்படுத்துவதை முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் தலைமை, அறிவியல் பூர்வமாகக் கண்காணித்துத் தடுக்க வேண்டும். கட்சியின் தலைமைப் பொறுப்புகள் மற்றும் மாவட்டப் பொறுப்புகள், களத்தில் நின்று உழைக்கும் புதிய சிந்தனை கொண்ட இளைஞர்களுக்கும், தூய்மையான கறைபடியாத கரங்களுக்குமே போர்க்கால அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

பழைய அரசியல் ஆசாமிகளின் ஒட்டு வங்கித் தந்திரங்களுக்குப் பலியாகாமல், தூய்மையான மாற்று அரசியலை நிலைநாட்டினால் மட்டுமே 'தவெக' என்ற தனித்துவ அடையாளம் காக்கப்படும்; தவறினால், அது "மாற்று வடிவ அதிமுக" என்ற பொதுமக்களின் கறாரான விமர்சனத்திற்கு அப்பட்டமாக உள்ளாகும்.




தமிழக அரசியல் களம் தற்போது புதிய திருப்பங்களை நோக்கி நகர்ந்து வரும் வேளையில், "தமிழக வெற்றிக் கழகம் (தவெக) என்பது தவெக அல்ல... அது 'தவெக என்கின்ற அதிமுக'" என்ற விவாதம் பொதுமக்கள் மற்றும் அரசியல் கூர்நோக்கு பிளாட்பார்ம்களில் மிகத் தீவிரமாக எழுந்து சூடான விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

**அதிமுகவினரின் தொடர் படையெடுப்பு:**

தமிழகத்தில் புதிய மாற்று சக்தியாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளத் துடிக்கும் தவெக கட்சியில், சமீபகாலமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து அடிமட்டத் தொண்டர்கள் முதல், முன்னாள் நிர்வாகிகள், தேர்தலில் போட்டியிட்டு வென்றவர்கள் மற்றும் தோல்வியைத் தழுவியவர்கள் எனப் பலதரப்பட்ட முக்கிய முகங்கள் பெருமளவில் இணைந்து வருகின்றனர். இந்தத் தொடர் அரசியல் நகர்வுகளே, இக்கட்சியை அரசியல் விமர்சகர்கள் "தவெக (என்ற) அதிமுக" என்று முத்திரை குத்துவதற்கு பிரதான காரணமாக அமைந்துள்ளது.

**கள நிலவரமும் நிதர்சனமும்:**

ஏற்கனவே வலுவான உட்கட்டமைப்பைக் கொண்டுள்ள ஒரு திராவிடக் கட்சியின் மூத்த மற்றும் நடுத்தர நிர்வாகிகள், புதியதாகத் தொடங்கப்பட்ட ஒரு பேரியக்கத்தின் மாவட்ட மற்றும் ஒன்றிய பொறுப்புகளைக் குறிவைத்து உள்நுழைவது, தவெகவின் உண்மையான 'மாற்று அரசியல்' என்ற தத்துவத்திற்குக் சவாலாக மாறுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. பழைய முகங்களை வைத்தே புதிய அரசியலைக் கட்டமைக்கத் துடிக்கும் இந்த உத்தி, தமிழக வாக்காளர்களிடையே எந்த மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற விவாதம் தற்போது அனல் பறந்து கொண்டிருக்கிறது.



# திருப்பூரில் முதல்வர் விஜய் பிறந்தநாளில் 1000க்கு மேற்பட்டோருக்கு அறுசுவை அன்னதானம்!

திருப்பூர், ஜூன்.23-
தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவரும், மாண்புமிகு தமிழக முதலமைச்சருமான ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு, திருப்பூர் மாநகர் மாவட்டக் கழகத்தின் சார்பில் பொதுமக்களுக்குப் பிரம்மாண்டமான முறையில் அறுசுவை அன்னதான உணவு வழங்கும் உன்னத மக்கள் நலத்திட்ட விழா இன்று மிக எழுச்சியாக நடைபெற்றது.பொருளாளர் தலைமையில் திரண்ட பொதுமக்கள்:திருப்பூர் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெற்ற இம்மாபெரும் அன்னதானக் கொண்டாட்டத்திற்குத் திருப்பூர் மாநகர் மாவட்டக் கழகப் பொருளாளர் வெள்ளைச்சாமி முறைப்படி தலைமை தாங்கினார். முக்கிய நிர்வாகிகள் ராஜசேகர் மற்றும் பாலகுமார் ஆகியோர் முன்னிலை வகித்து நிகழ்வைச் சிறப்பித்தனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு அறுசுவை உணவு:இவ்விழாவிற்கான ஒட்டுமொத்தப் பிரம்மாண்ட ஏற்பாடுகளையும் டாக்டர் கனிஷ்கா சிவக்குமார் மற்றும் 'ஓம் சக்தி சில்க்ஸ்' ரஞ்சித் குமார் ஆகியோர் மிக நேர்த்தியாகச் செய்திருந்தனர். புதிய பேருந்து நிலையத்திற்கு வருகை தந்த பயணிகள், சாமானிய உழைப்பாளர்கள் மற்றும் ஏழை எளிய பொதுமக்கள் என 1,000க்கும் மேற்பட்டோருக்குத் தங்குதடையின்றி தூய்மையான, சுவையான அறுசுவை மதிய உணவு அள்ளி அள்ளி வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சொர்க்கம் நீதி ராஜன், புதிய பேருந்து நிலையம் பகுதி கழகப் பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் பாலா, ராஜசேகர், திலீப், ரங்கசாமி, செல்வராஜ், மணிகண்டன், அருண் பாண்டி, சிதம்பரம் உள்ளிட்ட மாவட்ட, பகுதி கழக முக்கிய நிர்வாகிகள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், தொண்டர்கள் என நூற்றுக்கணக்கானோர் பெருந்திரளாகப் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

# "அன்றாட வாழ்வில் யோகாவின் அசாத்திய நன்மைகள்!" திசையன்விளை பல்கலைக்கழகக் கல்லூரியில் NSSன் யோகா திருவிழா!

திசையன்விளை, ஜூன்.23-
திசையன்விளை மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியில், நாட்டு நலப்பணித்திட்டம் (NSS) சார்பாக சர்வதேச யோகா தினம் - 2026 கல்லூரியின் வளாகத்தில் மிக விமரிசையாக கொண்டாடப்பட்டது.

*முதல்வர் தலைமை மற்றும் வரவேற்புரை:* நிகழ்விற்கு ஆங்கிலத் துறைத் தலைவர் முனைவர் தமிழ்செல்வி வரவேற்புரை வழங்கி விழாவினைத் தொடங்கி வைத்தார். கல்லூரி முதல்வர் முனைவர் து. லில்லி நிகழ்விற்குத் தலைமை தாங்கிப் பேருரையாற்றினார். அப்போது, "இன்றைய அவசர காலகட்டத்தில் மனிதனின் உடல் மற்றும் மனம் அடையும் உன்னதப் பயன்களுக்கு யோகா கலை எவ்வளவு இன்றியமையாதது" என்பதைத் தனது தலைமையுரையின் மூலம் மாணவர்களுக்கு அறிவியல் பூர்வமாக எடுத்துரைத்தார்.*யோகா பயிற்சியாளரின் செய்முறை விளக்கம்:*இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராகத் திசையன்விளையைச் சேர்ந்த பிரபல யோகா பயிற்சியாளர் தனக்குமரன் கலந்துகொண்டு சிறப்பித்தார். அவர், "அன்றாட வாழ்வில் யோகாவைத் தங்குதடையின்றிப் பின்பற்றுவதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் மற்றும் ஒரு மனிதன் தனக்கான ஆரோக்கியமான வாழ்க்கை முறையை உருவாக்குவதில் யோகாவின் முதன்மையான பங்கு" குறித்துச் சிறப்புரையாற்றினார். மேலும், அங்கிருந்த மாணவ, மாணவிகளுக்குப் பல்வேறு கடினமான யோகாசனங்களை மிக எளிமையான முறையில் செய்முறை விளக்கத்துடன் கற்றுக் கொடுத்தார்.மேலும், நிகழாண்டின் உலகளாவிய யோகா தினக் கருப்பொருளான "ஆரோக்கியமான முதுமைக்கான யோகா" என்பதன் உன்னத முக்கியத்துவமும், அதன் அவசியமும் விழாவில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.இறுதியாக, நாட்டு நலப்பணித் திட்டஅலுவலர் ப. சுப்பிரமணியன் நன்றியுரை வழங்கினார். விழாவிற்கான அனைத்து விரிவான ஏற்பாடுகளையும் கல்லூரி முதல்வர், அனைத்துத் துறைத் தலைவர்கள், உதவிப் பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் இணைந்து மிக நேர்த்தியாகச் செய்திருந்தனர். யோகா பயிற்சியுடன் நிறைவுற்ற இந்நிகழ்ச்சி ஒட்டுமொத்தக் கல்லூரி வட்டாரத்திலும் மிகச் சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.





# "பத்மாசனம் முதல் புஜங்காசனம் வரை!" விஎஸ்ஆர் மெட்ரிக் பள்ளியில் மாணவர்கள் நடத்திய யோகா விழிப்புணர்வு!

திசையன்விளை, ஜூன்.23-
திசையன்விளை வி.எஸ். ஆர். மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில், மாணவர்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில் சர்வதேச யோகா தின விழா பள்ளியின் வளாகத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.*முதல்வர் தலைமை மற்றும் உன்னத விழிப்புணர்வு:*நிகழ்விற்கு வி.எஸ்.ஆர். மெட்ரிக் பள்ளி முதல்வர் விஜயா தினகரன் தலைமை தாங்கி, யோகா தின விழிப்புணர்வு நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்தார். அப்போது மாணவர்களிடையே உரையாற்றிய முதல்வர், "இன்றைய நவீன அவசரக் காலகட்டத்தில் தினமும் யோகாசனம் செய்வதினால் நம்முடைய மனமும் உடலும் அசாத்திய பலன் கொள்ளும். மாணவர்களின் பல்வேறு தனித்துவமான திறமைகளையும், ஆளுமைகளையும் வெளிக்காட்ட யோகா கலை ஒன்றே சிறந்த மனதிடத்தையும், அசைக்க முடியாத நம்பிக்கையையும் தரும்" என்று அறிவியல் பூர்வமாகஎடுத்துரைத்தார்.*ஆசிரியரின் வழிகாட்டுதலில் அசத்திய மாணவர்கள்:*அதனைத் தொடர்ந்து நடைபெற்ற யோகாசனப் பயிற்சியில், பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர் தவசி கனி அவர்களின் நேர்த்தியான வழிகாட்டுதலின்படி, குறிப்பாக பத்மாசனம், சக்கராசனம், அர்த்த சக்ராசனம், உட்கட்டாசனம், புஜங்காசனம் உள்ளிட்ட உடலுக்குப் பெரும் வலிமை சேர்க்கும் பல்வேறு கடினமான யோகாசனங்களை மாணவர்கள் மிக நேர்த்தியாகவும், அழகாகவும் செய்து காட்டி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினர்.பள்ளி மாணவர்கள் அனைவரும் இந்த யோகாசனங்களை எளிய முறையில் கற்றுக் கொள்ளும் வகையில், இதர ஆசிரியப் பெருமக்களும் தகுந்த ஆலோசனைகளை வழங்கி மாணவர்களை வழிநடத்தினர். விழாவின் நிறைவாக, தினமும் யோகா செய்வதால் ஏற்படும் உன்னத நன்மைகளை மீண்டும் ஒருமுறை நினைவு கூர்ந்து பள்ளி முதல்வர் விஜயா தினகரன் நன்றியுரையை வழங்கினார்.

# செப்.17ல் சென்னையில் சர்வதேச வேளாண் வர்த்தக மாநாடு தொடக்கம்



சென்னை, ஜூன்.23-
சர்வதேச வேளாண் வர்த்தக மாநாடு மற்றும் கண்காட்சி வரும் செப்.17 முதல் 20 வரை சென்னையில் நடைபெற உள்ளதாக கிராப் நெக்ஸா அமைப்பு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அந்த அமைப்பின் தலைவர் ராஜேஷ் கண்ணா வெளியிட்ட தகவல்: 'இந்திய வேளாண்மையை உலக சந்தையுடன் இணைக்கும் மிகப்பெரிய சர்வதேச வேளாண்மை வர்த்தக மாநாடு மற்றும் கண்காட்சி வரும் செப்.17 முதல் 20 வரை சென்னையில் நடைபெற உள்ளது.

வேளாண்மை, உணவு பதப்படுத்துதல், ஏற்றுமதி, தொழில்நுட்பம், முதலீடு மற்றும் உலகளாவிய சந்தை வாய்ப்புகளை ஒரே தளத்தில் கொண்டு வரும் இந்த மாநாடு, இந்திய விவசாயிகளுக்கும் வேளாண் தொழில் நிறுவனங்களுக்கும் புதிய வளர்ச்சி வாயில்களை உருவாக்கும்.

இந்த மாநாட்டில் இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த விவசாயிகள், விவசாய உற்பத்தியாளர் நிறுவனங்கள், வேளாண் ஆராய்ச்சியாளர்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள், வேளாண் தொழில்நுட்ப நிறுவனங்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள், முதலீட்டாளர்கள், ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், அரசுத் துறை அதிகாரிகள், சர்வதேச வர்த்தக பிரதிநிதிகள் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர். சர்வதேச வேளாண்மை மற்றும் வேளாண் வணிக கண்காட்சி, உலகளாவிய வாங்குபவர் ஸ்ரீ விற்பனையாளர் சந்திப்பு, வேளாண் ஏற்றுமதி மற்றும் சர்வதேச வர்த்தக கருத்தரங்குகள், உணவு பதப்படுத்தல் மற்றும் மதிப்புக்கூட்டல் தொழில்நுட்ப அரங்கம், வேளாண் ஸ்டார்ட்அப் மற்றும் புதுமை கண்டுபிடிப்பு கண்காட்சி, துல்லிய வேளாண்மை தொழில்நுட்ப மையம், முதலீட்டு மற்றும் தொழில் இணைப்பு நிகழ்ச்சிகள், சர்வதேச பிரதிநிதிகளுடன் நேரடி சந்திப்பு ஆகியவை மாநாட்டின் முக்கிய அம்சங்களாக இருக்கும். இதனால், புதிய தொழில்நுட்பங்களை அறியும் வாய்ப்பு, ஏற்றுமதி சந்தை தொடர்புகள், மதிப்புக்கூட்டப்பட்ட விவசாயம் குறித்த விழிப்புணர்வு, அரசுத் திட்டங்கள் மற்றும் நிதி வாய்ப்புகள் பற்றிய தகவல்கள், தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் நேரடி தொடர்பு, புதிய தொழில் மற்றும் வருமான வாய்ப்புகள் ஆகிய பலன்கள் விவசாயிகளுக்கு கிடைக்க உள்ளன.இந்த மாநாடு தமிழகத்தை சர்வதேச வேளாண் வர்த்தக மையமாக உயர்த்தும் முக்கிய முயற்சியாக அமையும். விவசாயிகள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில் முனைவோர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு அழைக்கப்படுகிறார்கள்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் பணியாற்றிய பெண்களுக்கு ஊதியம் தரவில்லை என புகார்

திருச்சி, ஜூன்.23-
மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் பணியாற்றிய பெண்களுக்கு ஊதியம் தரவில்லை என கூறி புதுக்கோட்டை, திருச்சி, திண்டுக்கல், நாகர்கோவில், கள்ளக்குறிச்சி, கோவை, சிவகங்கையில் மாவட்ட ஆட்சியர்களிடம் புகார் மனு அளித்துள்ளனர்.

கடந்த திமுக ஆட்சியில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் தொடங்கப்பட்டு, தற்போது வரை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம், பொதுமக்களின் வீடுகளுக்கே நேரடியாகச் சென்று அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளை வழங்குவது நடைமுறையில் உள்ளது.

குறிப்பாக, கிராமப்புறங்களுக்கு இத்திட்டத்தின் பணியாளர்கள் நேரடியாகச் சென்று, மக்களுக்குத் தேவையான மருத்துவச் சிகிச்சைகள் மற்றும் மாத்திரைகளை வழங்கும் பணிகளைச் செய்து வருகிறார்கள். இந்நிலையில், இத்திட்டத்தில் கடந்த 3 மாதங்களாகப் பணியாற்றி வரும் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ளனர். தொடக்கத்தில் தினமும் 2 மணி நேர வேலை என்ற அடிப்படையிலேயே இப்பணியைச் செய்து வந்துள்ளனர்.

ஆனால் கடந்த சில மாதங்களாகவே 8 மணி நேரம் வேலை பார்க்க வேண்டும் என அதிகாரிகள் வற்புறுத்தியதால், அவர்கள் கூடுதல் நேரம் பணியாற்றி வந்துள்ளனர். இருப்பினும், அதற்கேற்றவாறு அவர்களுக்கான 3 மாத ஊதியம் இதுவரை வழங்கப்படவில்லை. அதேபோல், கடந்த 5 ஆண்டுகளாக 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தில் பணியாற்றி வரும் ஊழியர்களுக்கு முறையான ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

# பெண்களிடம் தவறாக நடக்க முயன்ற நபரை அதிரடியாக பிடித்து காவல்நிலையத்தில் ஒப்படைத்த திருப்பூர் மாவட்ட சிங்கப்பெண் சிறப்புப் படை

## காவலர்கள் குற்றவாளி மீது வழக்கு பதிந்து சிறையில் அடைப்பு

திருப்பூர், ஜூன்.23-
திருப்பூர் மாவட்டம், பல்லடம் உட்கோட்டம், பல்லடம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அருள்புரம் கணபதிபாளையம் பகுதியில் நேற்று 21.06.26 அன்று வாரச் சந்தை நடைபெற்றது. இந்நிலையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவுப்படி பொதுமக்கள் / பெண்கள் அதிகம் கூடும் இடங்களில் பாதுகாப்பு பணிக்காக சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையினர் அப்பகுதியில் கண்காணித்து வந்தனர்.இந்நிலையில் அப்பகுதியில் சந்தைக்கு வந்த பெண்களிடம் ஒரு நபர் தவறாக நடக்க முயன்றதாக கிடைத்த தகவலையடுத்து அங்கு விரைந்து சென்ற சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையினர் மேற்படி சம்பவத்தில் ஈடுபட்ட நபரை விரைந்து பிடித்து, பல்லடம் காவல்துறையினரிடம் ஒப்படைத்தனர். இந்நிலையில் பெண்களிடம் தவறாக நடக்க முயன்ற நபர் மீது பாதிக்கப்பட்ட பெண் கொடுத்த புகாரின் பேரில் பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்த பல்லடம் காவல்துரையினர் மேற்படி சம்பவத்தில் ஈடுபட்ட பீகார் மாநிலத்தைச் சேர்ந்த ஜலாலுதீன் அன்சாரி (30), என்ற நபரை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.பெண்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் ரோந்து பணியில் ஈடுபட்டு விரைவாக செயல்பட்டு பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்த திருப்பூர் மாவட்ட சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையினரையும், வழக்கு பதிவு செய்து உடனடி நடவடிக்கை எடுத்த பல்லடம் காவல்துறையினரையும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வெகுவாகப் பாராட்டினார்கள்.

# புளியங்குடியில் டிஎன்டிஜே (TNTJ) மகளிர் இஸ்லாமிய கல்வியகப் பட்டமளிப்பு விழா!



தென்காசி, ஜூன்.23-
அண்ணல் நபியே அழகிய முன் மாதிரி என்கிற பிரச்சார செயல் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் புளியங்குடி மேற்கு கிளை சார்பாக, "ருக்கையா ரலி மகளிர் இஸ்லாமிய கல்வியகத்தின்" பட்டமளிப்பு விழா மற்றும் பொதுக்கூட்டம் மாவட்ட தலைவர் அப்துல் ஸலாம் முன்னிலையில் கிளை தலைவர் அப்துந் நாசர் தலைமையில் புளியங்குடி ரஹ்மத் பால்பண்ணை அருகில் நடைபெற்றது.

இந்த பொதுக்கூட்டத்தில் அண்ணல் நபியே அழகிய முன் மாதிரி என்கிற தலைப்பில் மாநில செயலாளர் சபீர் அலி, இந்திய முஸ்லிம்கள் சந்திக்கும் சவால்கள் என்கிற தலைப்பில் மாநில செயலாளர் அல் அமீன் ஆகியோர் உரையாற்றினர். பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிராக தமிழகம் தழுவிய பேரணி, கோவை சூளூரில் 10 வயது சிறுமி, கும்மிடிப்பூண்டியில் 3 வயது குழந்தை மற்றும் ஊத்தாங்கரையில் மூதாட்டி ஆகியோருக்கு நடந்த கொடூரமான பாலியல் அத்துமீறல்கள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. தினந்தோறும் நடக்கும் இத்தகைய குற்றங்களைக் கண்டித்தும், பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தமிழகம் முழுவதும் நூற்றுக்கணக்கான கண்டனப் பேரணிகளை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேகதாது அணை விவகாரத்தில் தமிழக உரிமைகளைப் பாதுகாத்தல்: மேகதாது அருகே கர்நாடக அரசு அணை கட்டுவதை எதிர்த்து, தமிழக சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சிகளும் இணைந்து தீர்மானம் நிறைவேற்றியது வரவேற்கத்தக்கது. அதே ஒற்றுமையுடன், தமிழகத்தைச் சேர்ந்த அனைத்து எம்பிக்களும், எம்எல்ஏக்களும் ஒரு அணியாகத் திரண்டு, ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுத்து மேகதாது அணைத் திட்டத்தை முற்றிலுமாக தடுத்து நிறுத்த வேண்டும். 'டெலிகிராம்' சமூக வலைத்தளத் தடைக்குக் கண்டனம்: நீட் தேர்வு வினாத்தாள் கசிவைத் தடுக்க என்ற காரணத்தைக் கூறி, 'டெலிகிராம்' செயலியைத் தற்காலிகமாகத் தடை செய்திருப்பது கண்டனத்திற்குரியது. வினாத்தாள் கசிவுக்குத் தனிநபர் மற்றும் நிர்வாகத் தவறுகளே காரணமே தவிர, செயலி காரணம் அல்ல. இது மக்களின் கருத்துரிமையைப் பறிக்கும் செயல் மற்றும் சமூக வலைத்தளங்களை முடக்க ஒன்றிய அரசு போடும் முதற்கட்டத் திட்டமாகும். . நீட் தேர்வு முறைகேடு ஸ்ரீ ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி நீக்கக் கோரிக்கை: ஒன்றிய பாஜக அரசு வரலாற்றைத் திரித்து பாடப் புத்தகங்களை உருவாக்குவதிலும், சிலரின் லாபத்திற்காக நீட் தேர்வை நடத்துவதிலும் மட்டுமே குறியாக உள்ளது. இதனால் தேர்வுகள் ரத்தாகி ஏழை மாணவர்கள் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகி, தற்கொலை செய்துகொள்ளும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. இந்தத் தோல்விகளுக்குப் பொறுப்பேற்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

# உதகையில் இரண்டாவது நாளாக கொட்டித் தீர்த்த கனமழை



நீலகிரி, ஜூன்.23-
உதகை சுற்றுவட்டார பகுதிகளில் இரண்டாவது நாளாக கொட்டிய கனமழையால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடுகிறது இதனால் வாகன ஓட்டிகள் பெரும் அவதியடைத்துள்ளனர். மேற்கு தொடர்ச்சி மலையில் அமைத்திருக்கக்கூடிய நீலகிரி உள்ளிட்ட சில மாவட்டங்களில் அதிக கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது.

அதன்படி இன்றைய தினம் இரண்டுவது நாளாக நீலகிரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய சில பகுதிகளில் கனமழை கொட்டி தீர்த்திருக்கிறது. குறிப்பாக உதகை நகரில் நேற்றைய தினம் சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக மழை பெய்த நிலையில், இன்றைய தினமும் அதேபோல ஒரு மணி நேரத்துக்கு மேலாக இடைவிடாது வெளுத்து வாங்கிய கனமழையால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இந்த பலத்த மழையால் பல்வேறு இடங்களில் தண்ணீர் தேங்குதல் மற்றும் போக்குவரத்து நெரிசல் போன்ற பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து கூடலூர் செல்லும் சாலையில் மழைநீர் ஆறுபோல பெருக்கெடுத்து ஓடியதால் இரு சக்கர வாகன ஓட்டுனர்கள் கடும் அவதிக்கு உள்ளாகினர். ரயில்வே மேம்பாலத்தில் மூன்றடி உயரத்திற்கு மழைநீர் தேங்கியதனால் அந்த சாலையில் போக்குவரத்துக்கு என்பது நிறுத்தப்பட்டு, மாற்று வழியில் இயக்கப்பட்டது. தொடர்ச்சியான இந்த மழையினால் உதகையில் கடுமையான குளிர் நிலவி வருகிறது. காற்றில் ஈரப்பதம் 81% ஆக உள்ளதால், மலைப்பகுதிகளில் மெல்லிய மூடுபனியும் கடுமையான குளிரும் நிலவுகிறது. நீர்நிலைகளில் நீர்வளர்ப்பு அதிகரித்திருப்பதால் உள்ளூர் மக்களும் விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள்



# பயிர் கடன் முழுமையாக தள்ளுபடி கோரி நாகையில் விவசாயிகள் உண்ணாவிரதம்

நாகை, ஜூன்.23-
நாகை அருகே கீழூவேளூரில் கூட்டுறவு பயிர் கடனை முழுமையாக தள்ளுபடி செய்யக் கோரி விவசாயிகள் இன்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். தமிழக சட்டமன்ற தேர்தலில் தவெக தலைவர் விஜய் அறிவித்தவாறு விவசாய கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்யக்கோரி நாகை மாவட்டம் கீழ்வேளூர் அடுத்த அத்திப்புலியூரில் தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் சார்பில் இன்று உண்ணாவிரத போராட்டம் நடந்தது. அப்போது விவசாயிகள் கைகளில் திருவோடுகளை ஏந்தி நூதன முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.தமிழ்நாடு செய்திமாநில கொள்கை பரப்பு செயலாளர் தமிழ்ச்செல்வன், தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்க மாநில கவுரவ தலைவர் ராமதாஸ், மாவட்ட செயலாளர் சக்திவேல், மாவட்ட தலைவர் விஜயராஜ், மாவட்ட பொருளாளர் காளிதாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்க பொறுப்பாளர் சரவணன் தலைமை வகித்து கண்டன உரையாற்றினர்.

உண்ணாவிரத போராட்டத்தில் தமிழக முதலமைச்சர் விஜய் தேர்தல் வாக்குறுதியின்படி கூட்டுறவு சங்கத்தில் வழங்கப்பட்ட கடன்களையும் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என கண்டன கோஷங்களை எழுப்பினர். உண்ணாவிரத போராட்டத்தின் ஒரு பகுதியாக அரை நிர்வாணத்துடன் விவசாயிகள் பங்கேற்று வாழை இலையில் மண் சோறு சாப்பிடும் போராட்டம் நடத்தினர்

# 12 மாநகராட்சிகளில் தூய்மைப் பணிகளை தனியாருக்கு ஒப்படைக்கும் முயற்சியை கைவிடுக: மார்க்சிஸ்ட்

சென்னை, ஜூன்.23-
“தமிழ்நாடு அரசு 12 மாநகராட்சிப் பகுதிகளில் தூய்மைப் பணிகளை தனியாருக்கு ஒப்படைக்க ஆய்வு செய்வதற்காக ஒப்பந்தப் புள்ளிகள் கோரியிருக்கிறது. தூய்மைப் பணியை தனியார் மயமாக்கும் முயற்சியை முழுவதுமாக கைவிட வேண்டும்” என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் வலியுறுத்தியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘மார்க் சிஸ்ட் கம்யூனி ஸ்ட் கட்சிமாநில செயற்குழு கூட்டம் இன்று சென்னையில் கட்சியின் மாநிலக்குழு அலுவலகத்தில் மத்தியக் குழு உறுப்பினர் கே.பாலபாரதி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர்கள் கே.பாலகிருஷ்ணன், உ.வாசு கி, மாநில செயலாளர் பெ.சண்முகம், மத்தியக்குழு உறுப்பினர்கள் என்.குணசேகரன், பி.சம்பத் மற்றும் மாநில செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், தூய்மைப் பணி தனியார்மய முயற்சியை கைவிட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாடு அரசு 12 மாநகராட்சிப் பகுதிகளில் தூய்மைப் பணிகளை தனியாருக்கு ஒப்படைக்க ஆய்வு செய்வதற்காக ஒப்பந்தப் புள்ளிகள் கோரியிருக்கிறது. இது தனியார்மயத்தை நோக்கிய முதல் படியாகும்.தூய்மைப்பணி தனியார்மய முயற்சிகளில் இதுவே தீவிரமான நடவடிக்கையாகும். அவ்வப்போது தனியார்மய முயற்சிகளை தமிழ்நாடு அரசாங்கம் மேற்கொள்வதும், ஊழியர்கள் போராடி தடுப்பதும், தள்ளிப்போடுவதும் கடந்த கால அனுபவமாக இருந்திருக்கிறது. தொழிலாளிகள் ஓய்வு பெற்றால் அந்த இடங்களை வெளிமுகமை வைத்து நிரப்புவது என்று அரசாணை வெளியிடப்பட்டதும் மாநகராட்சியின் சில வார்டுகள், மண்டலங்களில் தனியார்மயம் என்பதும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆனால், 12 மாநகராட்சி தூய்மைப் பணி ஒட்டுமொத்தமாக தனியார்மயமாக்கும் செயலாக இது உள்ளது. தேர்தலுக்கு முன்னர் சென்னை மாநகராட்சி தூய்மைப் பணி தொழிலாளர்கள் போராடும் போது தவெக அதை ஆதரித்திருக்கிறது. இந்தப் பின்னணியில், இந்த தனியார்மய முயற்சி முற்றிலும் நியாயமற்றதாகும். ஏழை மற்றும் அடிமட்ட குடும்பங்கள் நிரந்தர வருவாய் ஈட்ட ஈடுபடும் இந்தத் தொழிலை தனியார்மயமாக்குவது பொருத்தமற்றது.

எனவே, தூய்மைப் பணியை தனியார்மயமாக்கும் முயற்சியை முழுவதுமாக கைவிட வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயற்குழு தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறது’ எனத் தெரிவித்துள்ளார்.

# “12 நிமிடங்கள் பரத்வாஜாசனத்தில் அமர்ந்து அசாத்திய சாதனை!” சேலத்தில் அரங்கேறிய அர்ஜுனா உலக சாதனைத் திருவிழா!




சேலம், ஜூன்.23-
சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, சேலம் அயோத்தியாபட்டணம் பகுதியில் இயங்கி வரும் 'ராகவா ஸ்கூல் ஆஃப் யோகா' பயிற்சிப் பள்ளியின் சார்பாக, மாணவ மாணவிகள் கலந்துகொண்ட அசாத்திய "அர்ஜுனா உலக சாதனை" நிகழ்ச்சி சேலம் வைசியக் கல்லூரியில் மிக பிரம்மாண்டமாக அரங்கேறியுள்ளது.*7 நிமிட சாதனையை முறியடித்த 12 நிமிடப் புரட்சி:*

இவ்வர லாற்றுச் சிறப்புமிக்கச் சாதனைப் பதிவில், கடினமான 'பரத்வாஜாசனம்' என்ற ஆசனத்தை மாணவ, மாணவிகள் தொடர்ந்து 12 நிமிடங்கள் துல்லியமாகச் செய்து புதிய உலக சாதனையைப் படைத்துள்ளனர். இதற்கு முன்பாக, இந்த ஆசனம் அதிகபட்சமாக 7 நிமிடங் கள் மட்டுமே தொடர்ச்சியாகச் செய்யப்பட்டு முந்தைய சாதனையாகப் பதிவாகியிருந்தது. தற்பொழுது அதனை அடியோடு முறியடித்து, 12 நிமிடங்கள் வரை நீட்டித்ததால், இது புதிய உலக சாதனையாக அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டு, சாதனை புரிந்த மாணவச் செல்வங்களுக்கு அர்ஜுனா உலக சாதனைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.*வியப்பில் ஆழ்த்திய பிஞ்சுக் குழந்தைகள்:*மிகவும் கடினமான, வளைந்து கொடுக்கும் தன்மை கொண்ட இந்த ஆசனத்தில், குழந்தைகள் தங்களின் உடலை லாவகமாக வளைத்து 12 நிமிடங்கள் அசையாமல் அமர்ந்திருந்த உன்னதக் காட்சி, அங்கு திரண்டிருந்த பெற்றோர்கள் மற்றும் பார்வையாளர்கள் அனைவரையும் அப்பட்டமாக வியப்பில் ஆழ்த்தியது. பரத்வாஜாசனம் என்பது அனைவராலும் இயல்பாகச் செய்துவிட முடியாது என்றும், அதற்குத் தீர்க்கமான மற்றும் அறிவியல் பூர்வமான முறையான பயிற்சிகள் அவசியம் என்பதால், இந்த ஆசனத்தைக் கொண்டே இப்புதிய உலக சாதனை முயற்சி திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதாகப் பயிற்சிப் பள்ளி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*விருந்தினர்களும் நடுவர்களு ம்:*இம்மாபெரும் சாதனை விழாவில் சேலம் வைசியக் கல்லூரியின் தாளாளர் திரு. பி.சிவானந்தம் மற்றும் கல்லூரி முதல்வர் வெங்கடேஷ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு மாணவச் செல்வங்களைப் பாராட்டி வாழ்த்தினர். அர்ஜுனா உலக சாதனையின் அதிகாரப்பூர்வ நடுவர்களான ராஜகோபிநாத், ராகுல் ரத்தினகுமார் மற்றும் நவீன் கார்மேகம் ஆகியோர் இச்சாதனையைத் தரைமட்ட அளவில் கறாராகக் கண்காணித்து, முறைப்படி அங்கீகரித்து உறுதிப்படுத்தினர். மேலும், இந்த ஒட்டுமொத்த உலக சாதனை நிகழ்வையும் ரேமா சதாசிவம் மற்றும் துரைராஜ் முருகன் ஆகியோர் மிக நேர்த்தியாக ஒருங்கிணைத்திருந்தனர்.

# விவசாயிகளின் பிரச்சினையை தீர்க்க அமைச்சருக்கு நேரம் இல்லையா? கரும்பு விவசாயிகள் கண்டனம்

கும்பகோணம், ஜூன்.23-
விவசாயிகளின் பிரச்சினையை தீர்க்க வேளாண்மைத் துறை அமைச்சருக்கு நேரமில்லை என்பது வேதனை அளிப்பதாக கரும்பு விவசாயிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.பாபநாசம் வட்டம் திருமண்டங்குடியில் உள்ள திருஆரூரான் தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகம், கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை வட்டியுடன் சேர்த்து வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 2022, நவ.30ம் தேதி முதல் 1,300வது நாளாக கரும்பு விவசாயிகள் போராடி வருகின்றனர். இதுகுறித்து விவசாயிகள் கூறியது: வேளாண்மைத் துறை அமைச்சர் வினோத் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசுகையில், திருமண்டங்குடியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவிவசாயிகளை பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரிவித்தார். ஆனால், அவர் அப்படி யாரையும் அழைக்கவில்லை. அவரது உதவியாளரை நாங்கள் தொடர்பு கொண்டபோது, ‘அமைச்சர் மிகவும் பிசியாக’ இருப்பதாக தெரிவித்தார்.வேளாண்மைத் துறை அமைச்சருக்கு, விவசாயிகளின் பிரச்சினையைத் தீர்க்க நேரம் இல்லை என்பது வேதனையாக உள்ளது. பேச்சுவார்த்தை நடத்த கரும்பு விவசாயிகளை அழைத்ததாக பொய் கூறியுள்ள அமைச்சர் வினோத், எந்த விவசாயியிடம் பேசினார் என்ற விவரத்தை வெளியிட வேண்டும். இல்லையெனில், பொய் பேசியதற்காக காவல் நிலையத்தில் அவர் மீது புகார் அளிக்கப்படும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.



## பங்குச் வர்த்தக நஷ்டத்தால் கடத்தல் நாடகம்

# குடும்பத்தினரிடமே ரூ.50 லட்சம் கேட்டு மிரட்டியவர் மீது வழக்கு

சூரத், ஜூன்.23-
குஜராத் மாநிலம் சூரத்தைச் சேர்ந்த கணக்காளர் ஜிக்னேஷ் தலாவியா, பங்குச் சந்தை வர்த்தகத்தில் நஷ்டம் அடைந்து குடும்பத்தினரிடமே கடத்தல் நாடகமாடியுள்ளார்.

கடந்த ஜூன் 12ம் தேதி காணாமல் போன ஜிக்னேஷ், தான் கட்டி வைக்கப் பட்டிருப்பது போன்ற ஒரு வீடியோவை தனது குடும்பத்தினருக்கு அனுப்பியுள்ளார். அந்த வீடியோவில் தன்னை மர்ம நபர்கள் கடத்திவிட்டதாகவும், தன்னை விடுவிக்க ரூ.50 லட்சம் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் கூறுவதாகவும் தெரிவித்துள்ளார். இதுகுறித்து போலீஸாருக்கு தகவல் தெரிவித்தால் தன்னை கொன்றுவிடுவார்கள் என்றும் கூறியுள்ளார்.

ஜிக்னேஷ் குடும்பத்தினர் இதுகுறித்து சூரத் போலீஸில் புகார் செய்தனர். இதன் அடிப்படையில், போலீஸார் தரப்பில் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு தீவிர தேடுதல் வேட்டையில் இறங்கினர். கண்காணிப்புக் கேமராக்கள் மற்றும் செல்போன் சிக்னல்களை ஆய்வு செய்தனர். பின்னர் ஜூன் 15ம் தேதி கோத்ராவில் உள்ள ஒரு ஓட்டலில் இருந்து ஜிக்னேஷ் கைது செய்யப்பட்டார்.

விசாரணையில், அவர் தன்னைத் தானே கயிற்றால் கட்டிக் கொண்டு வீடியோ எடுத்து குடும்பத்தினரை ஏமாற்றியதை ஒப்புக்கொண்டார். பங்குச் சந்தையில் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுகட்ட இதுபோன்று செய்ததாக அவர் தெரிவித்தார்.

இதையடுத்து, ஜிக்னேஷ் மீது பொய் வழக்குப் பதிவு செய்தல், ஆதாரங்களை உருவாக்குதல் மற்றும் அரசு இயந்திரத்தை தவறாகப் பயன்படுத்துதல் ஆகிய பிரிவுகளின் கீழ் போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.



■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் “ பெண்குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்” விழிப்புணர்வு உறுதி மொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், இ.ஆ.ப., ஏற்றுக்கொள்ள அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள்.தொடர்ந்து, “ பெண்குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்” விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் துவக்கி வைத்தார். இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தண்டபாணி, தென்காசி சார்ஆட்சியர் வைஷ்ணவி பால், இ.ஆ.ப, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) காளிமுத்து, மாவட்ட சமூக நல அலுவலர் செல்வி.மதிவதனா மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்ற நீதிமன்றத்தில் அரசு உறுதியளிக்க வேண்டும்: இந்து முன்னணி



சென்னை, ஜூன்.23-
திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்ற தவெக அரசு நீதிமன்றத்தில் உறுதி அளிக்க வேண்டும் என்று இந்து முன்னணி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சி. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத் தூணில் தீபம் ஏற்றுவது தொடர்பாக உயர் நீதிமன்ற மதுரை கிளை வழங்கிய உத்தரவை அமல்படுத்துவது குறித்து புதிதாக பதவி ஏற்றுள்ள தவெக அரசின் நிலைப்பாடு குறித்து கேட்கப்பட்டது. இதற்கு, தமிழக அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதில் மனுவில் குழப்பமான கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. அதாவது, நூறாண்டு வழக்கமா? நீதிமன்ற தீர்ப்பா? என்று யோசிப்பதாக அரசு கூறியுள்ளது. மேலும் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய இருப்பதாகவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, சட்டத்தின் மாண்பை மதித்து நீதிமன்ற தீர்ப்பை அமல்படுத்துவது தான் கடமை. நீதிமன்றம் தீர விசாரணை நடத்தும்போது தனது கருத்தை தெரிவிப்பதோடு அரசின் நிலைப்பாடு முடிவுக்கு வந்துவிடுகிறது.ஆனால், தீர்ப்பை அமல்படுத்தாமல் தற்போது மக்களை குழப்புவது போல நீதிமன்றத்தில் பதில்மனு தாக்கல் செய்வது தவெக அரசின் நிர்வாகத் தோல்வியை வெளிகாட்டுவதாக உள்ளது. மேலும், தவெக மீதான மக்களின் நம்பிக்கை கேள்விக்குறியாகிறது.தவெக அரசானது திமுக கூட்டணி கட்சிகளின் ஆதரவை பெற்றுத்தான் ஆட்சியை தக்க வைத்துள்ளது. திமுகவின் இந்து விரோத, மக்கள் விரோத செயல்பாட்டை முதல்வர் ஜோசப் விஜய் தொடர நிர்ப்பந்திக்கப்படுகிறார் என்பது இதன் மூலம் தெரிகிறது.தமிழக முதல்வராக இருந்த திமுக தலைவர் ஸ்டாலின் உட்பட பல அமைச்சர்களை மக்கள் தூக்கி எறிந்து ஜோசப் விஜய்யை தேர்ந்தெடுத்துள்ளனர் என்றால் அதற்கு காரணம் இந்து விரோதமாக செயல்பட்டு மக்களின் வெறுப்பிற்கு ஆளானதுதான். அதை உணராமல் தவெக இன்னும் ஒரு திமுகவாக இருக்கும் என்பது மக்களின் நம்பிக்கையை பொய்த்துப் போக வைக்கிறது. திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் நேற்று நடந்த இந்து முன்னணி மாநில பொதுக்குழுவில், பக்தர்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப வருகின்ற கார்த்திகை தீபத்தன்று திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் தீபம் ஏற்ற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.எனவே, கடந்த ஆட்சியைப் போல நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காது, தமிழகம் உள்பட உலகம் முழுவதும் வாழும் முருக பக்தர்களின் உணர்வுகளை புண்படுத்தும் விதமாக தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அரசு கருத்து தெரிவித்து இருப்பதை இந்து முன்னணி வன்மையாக கண்டிக்கிறது.தமிழக அரசு, நீதிமன்ற தீர்ப்பின்படி கார்த்திகை அன்று திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபத்தூணில் தீபம் ஏற்ற நீதிமன்றத்தில் உறுதி அளிக்க வேண்டும் என்று இந்து முன்னணி வேண்டுகோள் வைக்கிறது” என தெரிவிக்கப்பட்டுள்ளது




## "சிவி விஜய் பிறந்தநாளில் களைகட்டிய திசையன்விளை!" காமராஜர் திடலில் தவெகவினர் கொண்டாட்டம்!

திசையன்விளை, ஜூன்.23-
தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவரும், தமிழக முதலமைச்சருமான ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு, நெல்லை மாவட்டம் திசையன்விளை பேரூர் கழகம் மற்றும் இளைஞரணி சார்பாக வெடி வெடித்து, கேக் வெட்டி, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கும் மாபெரும் எழுச்சிக் கொண்டாட்டம் நடைபெற்றது.*காமராஜர் சிலைக்கு மாலை அணிவிப்பு:*பிறந்தநாள் விழாவிற்குத் தவெக மாவட்ட இளைஞரணி இணை அமைப்பாளர் கணேஷ் அவர்கள் முன்னிலை வகித்தார். நகர இளைஞரணி அமைப்பாளர் சுதன் மற்றும் மாவட்ட இணை இளைஞரணி அமைப்பாளர் கணேஷ் ஆகியோரின் சிறப்பான மற்றும் கூட்டு உத்தியோடனான ஏற்பாட்டில் இந்நிகழ்ச்சி ஒருங்கிணைக்கப்பட்டது.
விழாவின் முக்கிய நிகழ்வாக, திசையன்விளை மையப்பகுதியில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, நூற்றுக்கணக்கான தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பிரம்மாண்ட கேக் வெட்டப்பட்டு, அனைவருக்கும் இனிப்புகள் அள்ளி அள்ளி வழங்கப்பட்டன. இவ்விழாவில் மாவட்ட மாணவரணி இணை அமைப்பாளர் ஜெயம் லிவிங்ஸ்டன், ஒன்றிய இணை அமைப்பாளர் கோபாலகிருஷ்ணன், ஒன்றிய பொருளாளர் முத்துராமலிங்கம், 14 வது வார்டு செயலாளர் செந்தில்குமார் மற்றும் நகர, மாவட்ட, ஒன்றிய, பேரூர் வார்டு பொறுப்பாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் எனப் பெருந்திரளான தவெக தம்பிகள் கலந்துகொண்டு, முழக்கங்களை எழுப்பி விழாவினைச் சிறப்பித்தனர்.

## தாமிரபரணி கருமேனியாறு நம்பியாறு திட்டக் குறைபாடுகளைத் தீர்க்க சாத்தான்குளம் தென்பகுதி விவசாய சங்கம் கோரிக்கை!

ராதாபுரம், ஜூன்.23-
வரலாற்றுச் சிறப்புமிக்கத் தாமிரபரணி கருமேனியாறு நம்பியாறு நதிநீர் இணைப்புத் திட்டத்தின் வெள்ள நீர் கால்வாயில் உள்ள உள்கட்டமைப்புக் குறைபாடுகளைப் போர்க்கால அடிப்படையில் சரிசெய்ய வலியுறுத்தி, சாத்தான்குளம் தென்பகுதி விவசாய சங்கத்தின் சார்பில் ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ச. சதீஷ் கிறிஸ்டோபர் மற்றும் நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரெட்டியார்பட்டி வி. நாராயணன் ஆகியோரிடம் நேரில் முக்கியக் கோரிக்கை மனுக்கள் வழங்கப்பட்டன.
*3,200 கன அடி தண்ணீரும்... கால்வாய்க் குறைபாடுகளும்:*
சாத்தான்குளம் தென்பகுதி விவசாய சங்கத்தின் தலைவர் லூர்து மணி தலைமையில், நிர்வாகிகள் மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்து இம்மனுவை



அளித்தனர். அம்மனுவில், "விவசாயிகளின் நீண்ட நாள் கனவுத் திட்டமான இந்த நதிநீர் இணைப்பு வெள்ள நீர் கால்வாயில் முழு கொள்ளளவான 3,200 கன அடி தண்ணீர் தங்குதடையின்றி வந்து சேர வேண்டும். ஆனால், தற்போதைய சூழலில் இக்கால்வாயில் இன்னும் சில உள்கட்டமைப்புக் குறைபாடுகள் நிலவி வருகின்றன. இதனால் தண்ணீர் வருவதில் சிக்கல் நீடிப்பதால், மக்கள் பிரதிநிதிகள் தலையிட்டு அதனை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும்" என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.
கல்லிடைக்குறிச்சி குறுக்குக் கால்வாய் மற்றும் தேரி குளம் கோரிக்கை:மேலும் அந்த மனுவில் குறிப்பிட்டுள்ள முக்கியக் கோரிக்கைகள் வருமாறு:
குறுக்குக் கால்வாய் அமைப்பு: கல்லிடைக்குறிச்சி பகுதியில் உள்ள ஊர்ச் சாக்கடைத் தண்ணீர் மழைக்காலங்களில் வடிய வழியின்றித் தேங்குவதால், தாமிரபரணி ஆற்றில் கல்லிடைக்குறிச்சி ஊர் வாரித் தண்ணீர் தங்குதடையின்றிச் சென்று சேரும் வகையில் புதிய 'குறுக்குக் கால்வாய்' ஒன்றை அமைக்க வேண்டும்.
எம்.எல்.தேரி குளம் விரிவாக்கம்: அரசூர் பூச்சிகாடு பகுதியில் உள்ள 63 ஏக்கர் பரப்பளவிலான எம்.எல்.தேரி (Additional pond) நிலத்தில், தற்போது வெறும் 10 ஏக்கர் பரப்பளவில் மட்டுமே குளம் அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலப்பரப்பிலும் தேங்கிக் கிடக்கும் மணலை முழுமையாக அப்புறப்படுத்தி, 63 ஏக்கர் நிலத்தையும் முழுமையான குளமாக மாற்றித் தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இந்நிகழ்வில் சாத்தான்குளம் தென்பகுதி விவசாய சங்க ஒருங்கிணைப்பாளரும் நடுவக்குறிச்சி தொழிலதிபருமான கனகராஜ், சங்கத்தின் துணைத் தலைவர் ரவிச்சந்திரன், செயலாளர் பெரியசாமி மற்றும் குட்டம் உழவர் உற்பத்தியாளர் குழுத் தலைவர் ராஜன் உள்ளிட்ட விவசாயப் பிரதிநிதிகள் திரளாகக் கலந்துகொண்டு சட்டமன்ற உறுப்பினர்களிடம் தங்களின் தார்மீகக் கோரிக்கைகளை விரிவாக எடுத்துரைத்தனர்.



## "8 தெருக்களிலும் சாக்கடை... தேங்கி நிற்கும் அவலம்!" அகரக்கட்டு லூர்து நாடார் தலைமையில் திரண்ட ஜெயச்சந்திராபுரம் மக்கள்!

சிவகிரி, ஜூன்23-
சிவகிரி தாலுகா தேவிப்பட்டிணத்தில் உள்ள ஜெயச்சந்திராபுரம் பகுதி மக்கள் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் தலைமையில் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு கொடுத்தனர்.அந்த மனுவில், தேவிப்பட்டிணம் ஊராட்சியில் உள்ள ஜெயச்சந்திரா புரத்தில் நாடார் சமுதாய மக்கள் மட்டும் வாழும் எட்டு தெருக்கள் உள்ளன. இந்த எட்டு தெருக்களிலும் கழிவு நீர் ஓடை இல்லாமல் தெருக்களில் ஆங்காங்கே கழிவுநீர்கள் தேங்கி கிடக்கிறது. அதனால் இந்த எட்டு தெருக்களிலும் கழிவு நீர் ஓடை அமைத்து தெருக்களில் ஹாலோ பிளாக் கல் பதிக்க வேண்டும் என்றும், இங்கு காலம் காலமாக எட்டு தெருக்களிலும் மண் தரை தான் இருக்கிறது என்றும், இங்கு உள்ள பெண்கள் சுகாதார வளாகத்தில் கதவுகள் உடைந்து பராமரிப்பு இல்லாமல் சுத்தம் செய்யாமல் அசுத்தமாக கிடைக்கிறது இதனை பராமரிக்க வேண்டும் என்றும்,
வீடுகளுக்கு தண்ணீர் செல்வதற்கு குடிநீர் இணைப்புகள் பிரித்து விடுகின்ற இடங்களில் கழிவு நீர்கள் தேங்கி குடிநீரோடு கண்ணுக்கு தெரியாத கிருமிகள் கலக்கிறது. இதனை சரி செய்ய வேண்டும் என்றும் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்தனர். இதில் தேவிபட்டிணம் அல்லிராஜன், தங்கரத்தினராஜ், பச்சை மயில், தங்கமலை, குருசாமி நாடார் ஆகியோர் உடனிருந்தனர்.

## வெற்று ஆடம்பரங்களைத் தவிர்த்து பசி ஆற்றிய தம்பிகள்! திருப்பூரில் நெகிழ்ச்சியை ஏற்படுத்திய மக்கள் நலத் திட்டம்!

திருப்பூர், ஜூன்23-
தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவரும், தமிழக முதலமைச்சருமான ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு, திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் உடுமலையில் ஏழை எளிய பொதுமக்களுக்கு அன்னதானம் மற்றும் இனிப்புகள் வழங்கும் மாபெரும் மக்கள் நலத்திட்ட விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.*மாவட்டச் செயலாளர் வழிகாட்டுதலில் மக்கள் சேவை:*முதலமைச்சர் விஜய் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் திருமலை அவர்களின் சிறப்பான வழிகாட்டுதலின்படி, உடுமலை அரசு மருத்துவமனை முன்பாக இம்மாபெரும் அன்னதான நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்விற்கு மடத்துக்குளம் மாரிமுத்து முறைப்படி தலைமை தாங்கி, அன்னதானத் திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.*இனிப்பு வழங்கி நெகிழ்ச்சிக் கொண்டாட்டம்:*அரசு மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக வரும் நூற்றுக்கணக்கான ஏழை எளிய பொதுமக்கள், அங்கு சிகிச்சை பெற்று வரும் உள் நோயாளிகள் மற்றும் அவர்களின் உறவினர்கள் எனப் பலதரப்பட்ட மக்களுக்கும் தங்குதடையின்றி மதிய உணவு மற்றும் பிறந்தநாள் இனிப்புகள் அள்ளி அள்ளி வழங்கப்பட்டன. முதலமைச்சரின் பிறந்தநாளை இப்படியொரு உன்னத மக்கள் சேவையோடு கொண்டாடியது அங்கிருந்த பொதுமக்களிடையே பெரும் நெகிழ்ச்சியையும் வரவேற்பையும் பெற்றது. இந்நிகழ்ச்சியில் தளி இராமலிங்கம், கிருஷ்ணகுமார், பனியன் துரை, ஜெகதீஸ்வரன், நித்திஷ், ஜெயக்குமார், செந்தில்குமார், ஹரி முருகன், வெனசுப்பட்டி சாமி தயாளன், சாலையூர் ராதாகிருஷ்ணன், லயன் நடராஜ் உள்ளிட்ட தமிழக வெற்றிக் கழகத்தின் முக்கிய நிர்வாகிகளும், தொண்டர்களும், பொதுமக்களும் பெருந்திரளாகக் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்.



■ ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று நடைபெற்றது. ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்த குமார் தலைமை தாங்கினார். கூட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை நேரில் பெற்றுக் கொண்ட அவர், மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றுக்கு உரிய நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.



## லக்னோவில் உள்ள தனியார் பயிற்சி மையத்தில் பயங்கர தீ விபத்து: 11 பேர் பலி

லக்னோ, ஜூன்23-
உத்திரப்பிரதேசம் மாநிலம் லக்னோவில் அரசுத் தேர்வுகளுக்கான பயிற்சி மையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. உத்தரபிரதேச மாநிலம் லக்னோவில் பூர்ணியா என்ற இடத்தில் பயிற்சி மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இங்கு ஏராளமான மாணவர்கள் பயின்று வருகின்றனர். வணிக வளாகம் ஒன்றில் மேல் கட்டடத்தில் தான் இந்த பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது.
சம்பவ தினமான இன்று அந்த வளாகத்தில் தீப்பிடித்தது. முதலில் மெதுவாக பற்றிய தீ, மளமளவென கட்டடத்தின் அனைத்து பகுதிகளுக்கும் பரவியது. தீப்பிடித்ததை அறிந்த பயிற்சி மைய மாணவர்கள் அலறினர். என்ன செய்வது என்று தெரியாமல் பீதியில் தவித்த அவர்கள், தங்கள் உயிரை காப்பாற்றிக் கொள்ள மாடியில் இருந்து குதித்தனர்.
இந்த தகவலறிந்த உள்ளூர் மக்கள் தீயணைப்புத் துறைக்கும், போலீசாருக்கும் தெரிவித்துவிட்டு கட்டடத்தில் சிக்கியவர்களை காப்பாற்ற முயன்றனர். இந்த சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்புத் துறையினர் சிறிது நேரம் போராடி தீயை கட்டுப்படுத்தினர்.
தீயில் சிக்கியவர்களில் மொத்தம் 11 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். மீட்பு பணி முழு வீச்சில் நடக்கிறது. கட்டடத்தை கரும்புகை சூழ்ந்துள்ளதால், பணிகள் தாமதம் ஆகி வருகின்றன. உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்




## சங்கரன்கோவிலில் முதலமைச்சர் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாள் விழாவில் பொதுமக்களுக்கு அன்னதானம்

தென்காசி, ஜூன்.23-
தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் தென்காசி மாவட்டபொறுப்பு அமைச்சர் வி கே ராஜ் அவர்களின் ஆணைக்கு இணங்கி தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் மாரியப்பன் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர் சி ஜோசப் விஜய் அவர்களின் 52 பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது இதில் நகரச் செயலாளர் சரவணன் ஒன்றியச் செயலாளர் எஸ் டி கே கனகராஜ் மாவட்ட வர்த்தக அணி இணை அமைப்பாளர் டி டி வி பிரேம்குமார் மாணவர் இளைஞர் அணி அமைப்பாளர் அமீர் நகர செயற்குழு உறுப்பினர் நாகராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் ஏராளமான கலந்து கொண்டு பிறந்தநாள் விழாவை மிக விமர்சையாக கொண்டாடினார்கள்




## தமிழக முதலமைச்சர் சி ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாள் விழா

உடுமலை, ஜூன்.23-
உடுமலை நகரம் ஏரி பாளையம் 1, 2 வார்டில் நடைபெற்றது தமிழக வெற்றி கழக தலைவரும் தமிழக முதல்வர் சி ஜோசப் விஜய் அவர்களின் 52 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு உடுமலை நகரம் 1வது வார்டு 2வது வார்டு பொதுமக்களுக்கு நலத்திட்டங்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் தூய்மை பணியாளர்களுக்கு வேட்டி சேலை நலத்திட்டங்களை திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் ஆர் திருமலை அவர்கள் தலைமையில் உடுமலை தெற்கு நகர கழக செயலாளர் அபுதாஹிர் மாவட்ட பொருளாளர் பிரகாஷ் குமார் அவர்கள் முன்னிலை வகிக்க ஏ பி டி அருண் உடுமலை நகர நிர்வாகியும் 1வது வார்டு பொறுப்பாளருமான அவர்கள் ஏற்பாட்டில் 2 வது வார்டு செயலாளர் கலைச்செல்வி மற்றும் தமிழக வெற்றிக்கழக பொறுப்பாளர்கள் 1வது வார்டு 2வது வார்டு பொதுமக்கள் கலந்து கொண்டனர் இந்நிகழ்ச்சி ஏரி பாளையம் காளியம்மன் திருக்கோயில் திருமண மண்டபத்தில் நடைபெற்றது




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000